REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆனி 24வ திங்கள் (8—7—57) ★ ★ வெளியீடு: ஆனி 25வ செவ்வாய் (9—7—57) [இதழ் 20

'உலக சர்க்கார் வேண்டாம்'

லண்டன், ஜூலை 7—

'உலக சர்க்கார் வேண்டாம்' என்று பிரிட்டிஷ் பெண்மணி ஒருவர் குரல் எழுப்பியிருக்கிறார்.

விம்பிள்டன் விளையாட்டு மைதானத்தில் 'டென்னிஸ்' பந்தயம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது பெண்மணி ஒருவர் 'இராணியை ஆண்டவன்தான் காப்பாற்றவேண்டும்; ஒரு உலக சர்க்கார் அமைவதைப் பெண்கள் எதிர்க்கிறார்கள்' என்ற வாசகங்கள் பொறித்த அட்டையோடு மைதானத்தில் நுழைந்து கோஷம் போட்டாராம்!

(4-ம் பக்கம் பார்க்க)

'வரி விதிப்பு காங்கிரஸ்காரருக்கு மட்டுமல்ல!'

'எல்லா ஏழைகளையுமே அவை பாதிக்கின்றன'

'கண்டிக்க எங்களுக்கு இல்லாத உரிமை வேறு எவருக்கு உண்டு?'

பல்லாயிரம் மக்களிடை பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் போர்ப் பரணி

சென்னை, ஜூலை 8—

"இன்று இவ்வளவு வரிகளைப் போட்டு ஏழை எளிய—பாட்டாளி—தொழிலாளி மக்களைக் கசக்கிப்பிழியும் இவர்கள் தேர்தல் காலத்தில், 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால், இன்னின்ன திட்டங்களுக்காக வரிகள் போடுவோம்; இன்னின்ன புது வரிகளை போடுவோம்' என்று, கூறினார்களா என்றால், இல்லை. ஆனால், தேர்தலுக்குமுன் இந்த நிலைமைகளையெல்லாம் தெரியாமலா இருந்தார்கள் என்றால், தெரிந்தே இருந்தார்கள்; திட்டங்களை தெரியாமலா இருந்தார்கள் என்றால் தெரிந்துதான் இருந்தார்கள்; புதிய வரிகளைபோட மனதில் எண்ணிக் கொண்டிருந்தார்களா என்றால், புதிய வரிகளைப்போட எண்ணிக் கொண்டுதான் இருந்தார்கள்.

"எல்லா நிலைமைகளையும்—திட்டங்களையும் அறிந்தும், புதிய வரிகளைப்போட திட்டங்களைத் தீட்டியிருந்தும் மக்களிடம் அவர்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலமாக கூறியிருக்கிறார்கள்—'திட்டத்தை நிறைவேற்ற நாம் பெருஞ்சுமையை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்; ஆனால், யார் அந்த சுமையைத் தாங்கிக்கொள்ள முடியுமோ அவர்கள் மீதுதான் சுமத்தப்படும்,'—என்று இந்த 'நல்லவர்கள்—காந்தியாரின் வாரிசுகள்—சத்யமேவஜெயதே (சத்தியமே வெல்லும்) என்று சொல்பவர்கள், தேர்தல் காலத்தில் தங்கள் தேர்தல் அறிக்கையில் கூறினார்கள்.

"'திட்டத்தைக் குறை! 10 ஆண்டுகளுக்குத் தள்ளிபோடு! அவசர அவசரமாக நிறைவேற்ற வேண்டுமென்று மக்கள் மீது புதிய புதிய வரிகளைத் திணிக்காதே! அச்செயல் முறையல்ல; தள்ளிப்போடுவதுதான் முறை!' என்று, எல்லாப் பத்திரிகைகளும்—பிரிட்டனிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளும்கூட எழுதின; மக்களும் கூறினார்கள்; அரசியல் தலைவர்கள் கண்டித்தார்கள். ஆனால், அமைச்சர்கள், 'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் போட்டது போட்டதுதான்; அது அது அந்தந்தக் காலத்தில் நிறைவேறியே தீரும்,' என்று கூறினார்கள்.

"தேர்தல் விஞ்ஞாபனத்தில் இவர்கள், 'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தினை சந்தர்ப்பம்போல்—நாட்டின் நிலைமைக்குத் தக்கவாறு மாற்றியமைத்துக்கொள்ள முடியும்,' என்று கூறினார்கள்; ஆனால், இப்பொழுது 'போட்டது போட்டதுதான்; நிறைவேற்றியே தீருவோம்; திட்டத்தைக் குறைக்கமாட்டோம்,' என்கிறார்கள். காரணம், 'இப்பொழுது தங்களை எதிர்ப்பதற்கு எவருமில்லை,' என்ற ஆணவத்தோடுதான் காரியங்களை செய்கிறார்கள்—நடந்துகொள்கிறார்கள்.

"நாம் சென்ற கூட்டங்களனைத்திலும், இந்தியப் பேரரசின் நிதியமைச்சரை 'தனது பதவியை இராஜினமா செய்துவிட்டு, புதிய வரிகளின்மீது தேர்தலு நில்லுங்கள்; மறு தேர்தலில் எல்லா திட்டங்களையும் மக்களிடம் விளக்கிக் கூறுங்கள்; வரிகளின் அவசியத்தைக் கூறி தேர்தலுக்கு நில்லுங்கள்' என்று நண்பர் என்ற முறையிலே கூறினோம்.

"ஆனால், அவர் கூறுகிறாராம்—'இவர்களா ஓட்டுப்போட்டு என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பினார்கள்,'-என்று! சாதாரணமாக தெருவிலே திரியும் ஒரு நாடோடி கூறினால், 'தெரியாதவன் பதவியிலிருக்கிறான்,' என்றுவது பொருள்படும்; ஆனால், இவர் இந்தியாவின் நிதியமைச்சர்—அவர் கூறுகிறார், 'இவர்களா என்னை தேர்ந்தெடுத்தனுப்பினார்கள்?'—என்று!

"அவருக்குப் பணிவன்போடு நான் கூறுகிறேன்—'நீங்கள் போட்டிருக்கும் வரிகள் காங்கிரஸ்காரர்களுக்குமட்டும்தான் என்றால், கேட்கமாட்டோம்; ஆனால் நீங்கள் போட்டிருக்கும் வரிகள் திராவிட முன்னேற்றக் கழகத்தவரையும் பாதிக்கின்றதே! நீங்கள் ஒரு மந்திரி! தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதிக்கு மட்டுமல்ல பிரதிநிதி! இந்தியாவின் நிதி மந்திரி! இதை அவர் தெரிந்து பேசவேண்டும். இவர் போட்டுள்ள வரிகள் காங்கிரஸ்காரர்களுக்குமட்டும் போட்டிருந்தால் நாம் கேட்கமாட்டோம்; எல்லா ஏழை—எளிய—பாட்டாளி—தொழிலாளி மக்களையும் பாதிக்கின்ற காரணத்தால்தான் நாம் கண்டிக்கிறோம்—போட்டவர் இந்தியாவின் நிதி மந்திரி என்ற காரணத்தால்!"

—என்று, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நேற்று நடைபெற்ற 'ஜூலை 7: பாராளுமன்ற உறுப்பினரிடம் முறையிடும் நாள்' பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

'பென்கால் எஸ்டேட்' தகராறு

சென்னை, ஜூலை 4—

கூனூரில் உள்ள 'பென்கால் எஸ்டேட்' தகராறு இப்போது கோவை 'அட்ஜூடிகேஷ'னுக்காக விடப்பட்டுள்ளதாம்.

மாலங்கோவ் கோஷ்டிக்கு எதிராக!

லெனின்கிராடில் ஆர்ப்பாட்டம்

"மாலங்காவ், கக்னுவிச், மாலடோவ் கோஷ்டியின் கட்சிக்கு விரோதமான குழப்ப நடவடிக்கைகளைக் கண்டித்துக் கோஷங்கள் எழுப்பி சுமார் 7 இலட்சம் லெனின் கிராட் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்,"

என்று, ரஷ்ய செய்தி நிறுவனமான 'டாஸ்' தெரிவித்துள்ளதாம்!

(4-ம் பக்கம் பார்க்க)

'புது வரி விதிப்புகளைக் கைவிடுக'

தலைநகர் மக்கள் கோரிக்கை

"இந்திய அரசியலார் விதித்துள்ள புதிய வரிகளாலும்—கட்டண உயர்வுகளாலும் பொதுமக்கள் குறிப்பாக தென்னகத்தின் ஏழை—நடுத்தர—பாட்டாளி மக்கள் வெகுவாகப் பாதிக்கப்படுகிறார்கள். ஏற்கெனவே தாங்க முடியாத வரிச்சுமையாலும், வாழ்க்கைத் தரத்தில் உயரமுடியாமலும் உள்ள மக்கள் தற்போதைய புது வரிகளால் மேலும் அவதிக்குள்ளாக்கப் படுகிறார்கள்; எனவே, ஏழை மக்களை பாதிக்கின்ற புதியவரிகளைஉடனடியாக கைவிடுமாறு இந்திய அரசியலாரை இக்கூட்டம் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறது"

என்ற தீர்மானம் ஒருமனதாக, நேற்று நடைபெற்ற கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களின் கையொலி ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

தலைநகரைக் குலுக்கிய ஊர்வலங்கள்

தெருவெல்லாம் எதிரொலித்த தென்னக மக்களின் உள்ளக்குமுறல்

புதிய வரி விதிப்பிற்கு எதிராகக் கழகம் முழங்கிய கண்டனம்

பாராளுமன்ற உறுப்பினர்களிடம் முறையீடு

சென்னை, ஜூலை 8—

நேற்று மாலை 4-மணிக்கு சென்னை—இராயபுரம் 'அறிவகத்'திலிருந்து, 'ஜூலை-7: பாராளுமன்ற உறுப்பினரிடம் முறையிடும் நாள்,' மாபெரும் ஊர்வலத்தில் சென்னையிலுள்ள தி. மு. கழகக் கிளைகளும், சார்பு மன்றங்களும் கலந்துகொண்டன.

ஏராளமான கழகத் தோழர்கள்—ஆதரவாளர்கள்—பொதுமக்கள் ஆகியோர் அணிவகுத்து, வரிக் கொடுமைகளை விளக்கும் ஒலி முழக்கங்களை எழுப்பியவண்ணம் சென்றனர்.

வட சென்னையில்:

ஊர்வலம் சென்னை-நகரமன்ற உறுப்பினர் தோழர் வி. முனுசாமி அவர்கள் தலைமையில், இராயபுரம்—'அறிவக'த்திலிருந்து புறப்பட்டு மன்னார்சாமி கோயில் தெரு, சிமெண்டரி ரோடு, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, பேசின்பிரிட்ஜ் ரோடு, வால்டாக்ஸ்ரோடு, யானைகவுனி பாலம், டிமெல்லோஸ் ரோடு, வழியாக வடசென்னை பாராளுமன்ற உறுப்பினர் தோழர் எஸ். சி. சி. அந்தோணி பிள்ளை அவர்களின் வீடுவழி சென்று, மீண்டும் பெரம்பூர் போக்ஸ்ரோடு, செர்மையா ரோடு, வேப்பேரி ஐரோடு, செடாம்ஸ் ரோடு, லெவல்கிராசிங் வழியாக நேப்பியர் பார்க் திடலை வந்தடைந்தது. ஊர்வலம் முடிவுறும் தருவாயில் சிறிது மழைத் தூறல் பெய்த காரணத்தால் தடைபட்டு வரவேண்டியிருந்தது.

திரு. எஸ். சி. சி. அந்தோணிப் பிள்ளையவர்கள் *முறையீட்டு நகலை நேப்பியர் பார்க்கில் மேடையிலேயே பெற்றுக் கொள்வதாக கடிதமூலமும் நேரிலும் மாவட்ட துணைச் செயலாளரிடம்அறிவித்திருந்ததால், அவரிடம் வீட்டில் தரவில்லை. அவர் அறிவித்தவண்ணம் கூட்டத்திற்கு வந்து, பொதுச் செயலாளர் அவர்கள் முறையீட்டு நகலை வழங்க, அவர் பெற்றுக் கொண்டார்.*

தென் சென்னையில்:

தென் சென்னை தி. மு. கழகத் தோழர்களும்—ஆதாவாளர்களும் — பொதுமக்களும் கொண்ட மாபெரும் ஊர்வலமொன்று, நகர மன்ற உறுப்பினர் தோழர் அ. பொ. அரசு அவர்கள் தலைமையில், திருவல்லிக்கேணி மெரினா கடற்கரையிலிருந்து புறப்பட்டு, எல்லிஸ் ரோடு வழியாக இந்தியப் பேரரசின் நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரிடம் முறையீட்டு நகலை கொடுக்கச் சென்றது.

அமைச்சர் அவர்கள் ஊரில் இல்லாததால், அவருடைய அந்தரங்கச் செயலாளரிடம், தோழியர் அலமேலு அப்பாதுரை, தோழர்கள் அ. பொ. அரசு, கோ. செங்குட்டுவன் ஆகிய மூவரும் சென்று, முறையீட்டு நகலைக் கொடுத்துவிட்டு மீண்டும் ஊர்வலத்துடன், மோபரீஸ் ரோடு, இராயப்பேட்டை கடைத்தெரு, வெஸ்ட்காட் ரோடு, மவுண்ட் ரோடு, டாம்ஸ் ரோடு, சாமிநாய்க்கன் தெரு, அருணாசலநாய்க்கன் தெரு வழியாக நேப்பியர் பார்க் திடலை வந்தடைந்தது.

நேப்பியர் பார்க் திடலில், ஏற்கெனவே திரண்டிருந்த மக்களும், இரு ஊர்வலத்திலிருந்து வந்த மக்களுமாக வெள்ளம்போல் பெருகி திடல் நிரம்பியிருந்தது.

கூட்டம் துவங்கு முன் மழை தூறல்விழுந்து தொல்லை கொடுத்தாலும் மக்கள் பொதுச்செயலாளரின் சொற்பொழிவைக் கேட்க ஆர்வத்துடன் குழுமியிருந்தனரென்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டம் இரவு 7 மணியளவில், சென்னை மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் கோ. செங்குட்டுவன் அவர்கள் தலைமையில் துவங்கியது.

அவர் தனது தலைமையுரையில், இந்தியப் பேரரசு விதித்திருக்கும் வரிகள் ஏழை-எளிய விவசாய மக்களை பெரிதும் பாதிக்கிறதென்பதையும், அப்படி மக்களை பாதிக்கும் வகையில் வாங்கப்படும் வரிப்பணம் மக்ளுக்காக ஒழுங்காகபயன்படுத்துவதில்லையென்பதையும், ஆட்சியின் நிருவாகத்தில் பெரும் பெரும் ஊழல்கள் நிரம்பியிருக்கிற காரணத்தால் ஏராளமான பணம் பாழடிக்கப்படுகிறதென்ற உண்மையையும், ஊழல்களையும் வீண் செலவுகளையும் நீக்கினால்மக்கள்மீது இம்மாதிரி புது வரிகளை போட்டு துன்புறுத்தவேண்டிய நிலை இருக்காது என்பதையும் விளக்கினர்.

அடுத்து பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 8—7—57 திங்கள்

நிதி அமைச்சர் நிலை!

சென்ற கிழமை துவக்கத்திலிருந்து நான்கு நாட்கள்வரை, சென்னை அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் பற்றிய பொது விவாதம் சென்னை சட்டசபையில் நடைபெற்று முடிந்துவிட்டது. விவாதங்களுக்கு நிதி அமைச்சர் தனது பண்பு கூடாது—குறையாது. வழக்கமான பதிலைத் தந்துள்ளார்.

காங்கிரசுக் கட்சியைச் சார்ந்தவர்கள் உட்பட மொத்தத்தில் 101 சட்டசபை உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்துகொண்டுள்ளனர். நிதி அமைச்சர் நீங்கலாக வேறு இரண்டு அமைச்சர்களும்கூட, பதிலளிப்பதில் பங்கு கொண்டுள்ளனர்.

விவாதத்தில் பங்கு கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டசபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், வரவு-செலவுத் திட்டம் பற்றிய தம்தம் கருத்தினை பொதுவாக—ஆனால் தெளிவுபட எடுத்தியம்பியுள்ளனர். கழக சட்டசபைக் கட்சித் தலைவர் அவர்களும், வரவு-செலவுத் திட்டம் பற்றிய கழகத்தின் கருத்தைக் கூடியவரை சுருக்கமாக—ஆனால் சுவைபட எடுத்துக் கூறியுள்ளார்.

வரவு-செலவுத் திட்டத்தின் மீது நடைபெற்றுள்ள விவாதம் பொதுப்படையானது என்பதை நிதி அமைச்சர் உள்ளிட்ட அனைவரும் அறிவர். அப்பொதுப்படையான விவாதத்திற்கொப்பத்தான், விவாதத்தில் பங்கு கொள்ளும் சட்டசபை எதிர்க் கட்சியினரின் வாதங்களும் பொதுப்படையாகவே இருக்கும் என்பது எதிர்பார்க்கக்கூடியதே.

அதே முறையில்தான் விவாதத்தின்போது எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இயம்பி உள்ளவை அனைத்தும் அமைந்துள் இருக்கிறது. ஆனால், விவாதங்களுக்குப் பதில் கூறியுள்ள நிதி அமைச்சரோ, பொதுப்படையான விவாதத்தின்போது கூர்மையான விவாதத்தை எதிர்பார்த்து ஏமாந்தவர்போல, பொதுவாக எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் குறிப்பாக முன்னேற்றக் கழக உறுப்பினர்களையும், வலுவில் நையாண்டி செய்வதில் முனைந்துள்ளார். அவ்வாறு கேலி பேசுவதுடனும் திருப்தி கொண்டுவிடாது. 'விஷயங்களை நன்கு ஆராய்ந்து கூற வேண்டும்—முக்கியமாக பட்ஜெட் விவாதத்தின்போது மேடைப் பிரசங்க மனப்பான்மையில் பேசினல் மதிப்பு, பயன் ஏற்படாது. பட்ஜெட்டில் உள்ள நுணுக்கங்களைப் படித்து பிறகு கூறலாம். அவ்வாறு படிக்காமல் இங்கு பொதுப்படையாகப் பேசுவதால் பயனில்லை—சிறியவனுயினும் கூறுகிறேன்—பெரியவர்கள்—அறிஞர்கள் தவருக நினைக்கக்கூடாது' என்று தமக்குத் தாமே நிகர் என்ற உணர்வில் நிதி அமைச்சர் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

நமது கழகத் தலைவர்களின் நாவன்மையைத் தமிழகம் நன்கு தெரிந்திருக்கின்றது. நிதி அமைச்சரும் அப்பேருண்மையைத் தெளிவாகத் தெரிந்து கொண்டுள்ளார். அந்தஎண்ணத்தின்மீதே, நமது கழகத்தவர்கள் சட்டசபையில் பேசிய பேச்சை, நிதி அமைச்சர் செவிமடுத்துள்ளதினுல்தான், அவர்கள் பேச்சில் செறிந்துள்ள பயன்தரு உண்மைகளை நிதி அமைச்சரால் தெரிந்துகொள்ள இயலாதுபோய்விட்டது.

வரவு-செலவுத் திட்டத்தில் நுணுகி ஆராய்வதற்கு ஏதவது இருக்கின்றதா என்பதை, சகலகலாவல்லவரான நிதி அமைச்சர்தான் இனி விளக்க வேண்டும். அப்பொழுதுதான், தமக்கு மட்டுமே அமைந்திருப்பதாகத் தம் திட்டமாக நம்பிக் கொண்டிருக்கும் கடல் போன்று பரந்து விரிந்து கிடக்கும் கல்வி அறிவையும், விவாத அனுபவ முதிர்ச்சியையும் நம் போன்ற பாமரர்களுக்கு நிதி அமைச்சர் உணர்த்தியவராவார்.

பொதுவாக எதிர்க் கட்சி உறுப்பினர்களும் குறிப்பாக நமது கழக சட்டசபை உறுப்பினர்களும் விவாதித்த முறையில், நயம் இருக்கிறது, தெளிவு இருக்கின்றது, எல்லாவற்றிற்கும் மேலாக தன்னடக்கப் தலைமையாக அமைந்திருக்கின்றது. இவ்வுண்மையை நாட்டு மக்கள் இதற்குள் தெரிந்து கொண்டிருப்பர்.

ஆனல் நிதி அமைச்சர் பதிலிலோ, தன்னடக்கத்திற்கு எதிர்மறையான தன்மை இருக்கிறது. இவ்வுண்மையையும் நாட்டு மக்கள் இதற்குள் உணர்ந்திருப்பர்.

மேடைப் பேச்சு என்றாலே நிதி அமைச்சருக்கு எட்டிக் காயாக இருக்கிறது. சூடு கண்ட பூனை பாலை வெறுப்பது போல, மேடைப் பேச்சை நிதி அமைச்சரும் வெறுக்கின்ருர் போலும்!

திராவிட நாடு கோரும் பிரச்சினையை ஐந்து அல்லது பத்தாண்டுக் காலத்துக்குத் தள்ளிப் போட்டுவிட்டு, தமிழகத்தைத் தொழில் மயமாக்கும் முயற்சியில் காங்கிரசுக் கட்சியுடன் ஒத்துழைக்கும்படி நிதி அமைச்சர், சட்ட சபையிலிருந்து கோரிக்கை வெளியிட்டுள்ளார். அப்படிக் கூறுகின்ற அதே நிதி அமைச்சர், இனி பிரிவினை ஏற்பாட்டிற்கு இடமே கிடையாது என்றும தமது அச்சம் கொண்டு அலை மோதும் நெஞ்சுக்கு ஆறுதலும் கூறிக் கொள்ளுகின்ருர். இது பற்றி விரிவாக ஆராய வேண்டும். ஆனல், தமிழகம் தொழில் மயமாக்கப்படுவதற்கும் நமது முன்னேற்றக் கழகத்திற்கும் உள்ள உறவைக் குறித்துக் குறிப்பிடுவதுடன் இதை முடிக்கிறோம்.

சகலகலாவல்லவரான நிதி அமைச்சர் நமது கழகத்தின் தேர்தல்அறிக்கையைக் காணுது இதுவரை இருந்தது வியப்பேயாகும். இனியாவது நமது தேர்தல் அறிக்கையை ஒரு முறை படித்துவிட்டு, தமிழகத்தைத் தொழில்மயமாக்குவதில் நமக்குள்ள ஆர்வத்தையும் தீவிரத்தையும் திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ள நிதி அமைச்சர் முன்வரட்டும்.

பண்டிதரின் விஜயத்தால் பலன் உண்டா?

சொல்லளவில் நட்பு—செயலளவில் தீங்கு!

இலங்கை சர்க்கார் போக்கிற்குக் கண்டனம்

"இலங்கையின் அரசியல் மேம்பாட்டிற்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பெரிதும் காரணமாயிருந்ததோடு, தொடர்ந்து துணைபுரிந்தும்வந்த இந்திய மக்களுக்கு இலங்கை அரசாங்கம் இழைத்துள்ள அநீதி, இருநாடுகளுக்குமிடையே நிலவிவந்த நல்லுறவுப் பண்பைத் துண்டிப்பதாகும்.

"இலங்கைத் தீவின் முன்னேற்றத் திட்டங்களில் இலங்கையர்களுக்கும் இந்தியர்களுக்கும் முரண்பாடில்லாத வாய்ப்புள்ள வசதிகளை அளித்திருக்ககூடும்; ஆனல் இலங்கை அரசினர், இந்தியர்களை வெறுத்து ஒதுக்கும் ஒரு தவருன மனப்பான்மையை வளர்த்து வருகின்ருர்கள்.

"சொல்லளவில் இந்தியாவோடு உறவும், செயல் அளவில் இந்தியர்களுக்குத் தீங்கும் செய்துவரும் அரசாங்கத்தின் கொள்கையில் ஏதாவது மாறுதல் ஏற்படாதா என்ற எண்ணம் அடிக்கடி தோன்றியுள்ளது. இந்தியத் தலைமை அமைச்சர் நேருவிற்கு இலங்கை அரசாங்கம் அண்மையில் அளித்த வரவேற்பைப் பார்த்தால், எதிர்ப்புக் கொள்கையில் ஒரு சிறிதாவது மாற்றம் ஏற்படக் கூடும் என்று சிலர் கருதினர்கள்.ஆனல் வெளிப்பகட்டு, உள்ளக் கருத்தை மறைப்பதாக இருந்ததேயொழிய மாற்றுவதாக இல்லை இது பெரிதும் வருந்தத்தக்கதாகும்"

—என்று, 'வெளியேற்றும் கொள்கை' என்ற தலைப்பில், 47——57 'தமிழ்நாடு'இதழ் தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் எழுதியிருப்பதாவது :—

"இலங்கை அரசினர் இந்தியர்களைக் குறித்துப் பின்பற்றிவரும் கொள்கையின் விளைவாக நிகழ்ந்துள்ள தீங்குகள், அண்மையில் வெளியான அவ்வரசாங்கத்தின் நிருவாக அறிக்கையொன்றில் காணப்படுகின்றன

"1956-ம் ஆண்டிலும், அதற்கு முன் ஆறு மாத காலத்திலும், இலங்கை அரசாங்கத்தால் கட்டாயப்படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்ட இந்தியர்களுடைய மொத்த எண்ணிக்கை 15,889 என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

"இதைக் குறித்து குடியேற்றக் கட்டுப்பாட்டு ஆணையாளர் தன்னுடைய மகிழ்ச்சிப்பெருக்கைத் தெரிவித்திருக்கிருர்; இதனுல் ஏறத்தாழ 16,000 இலங்கையினருக்கு வேலையில்லாக் குறை நீங்கிவிடுமாம்!

"இதுமட்டுமல்லாமல், சென்ற ஓராண்டில் இலங்கையைவிட்டு நீங்கும்படி 18,000 இந்தியர்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. மூன்று மாத காலத்திற்குள் அவர்களனை வரும் வெளியேற வேண்டும் என்பதே அவ்வெச்சரிக்கை.

"மேலும், 17,000 இந்தியர்களுக்கு ஆறுமாத கால முதல் ஓராண்டு வரையில் வெளியேறுவதற்குரிய வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. குடியேற்றக் கட்டுப்பாட்டு நிருவாக அறிக்கையின்படி 28,000 இந்தியர்கள் தாமாகவே இலங்கையை விட்டு நீச்கிவிட்டார்களென்று தெரிகிறது. கள்ளத்தனமாக இலங்கைத் தீவிற்குள் செல்பவர்களின் எண்ணிக்கை, முன் ஆண்டிலிருந்த 2.129-லிருந்து நடைமுறை ஆண்டில் 981 ஆகக் குறைந்திருக்கிறது.

"இதனுல், இலங்கை அரசாங்கத்தின் வெளியேற்றக் கொள்கையும், குடியேற்றத் தடுப்புமுறையும் வெற்றி பெற்று வருவது புலப்படும். குடியேற்றச் சட்டத்தின்கீழ் எவ்வளவு இந்தியர்களைக் கொண்டுவர முடியுமோ, அவ்வளவு முயற்சி செய்ய வேண்டுமென்பது இலங்கை அரசாங்கத்தின் முதன்மையான குறிக்கோள். இக்குறிக்கோளுக்குச் சென்ற ஆண்டில் ஒரு முக்கியமான அடிப்படை கற்பிக்கப்பட்டது; அதாவது, பல்வேறு துறைகளில் வாழ்க்கை நடத்தும் பணிபுரிந்து வந்துள்ள 'இந்தியர்களை அவ்வத் துறைகளிலிருந்து வெளியேற்றிவிட்டால், அப்பணிகளிலெல்லாம் இலங்கையர்களையே நியமிக்க வேண்டும் என்ற நோக்கம், நடைமுறைத் திட்டமாகச் செயலாற்றத் தொடங்கியது. படிப்படியாக இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால், இலங்கைத் தீவின் பொருளாதார அமைப்பின் போக்கில் எத்தகைய அசைவும் ஏற்பட்டு விடாதென்பது அவர்களுடைய கருத்தாகும்."

காமராசர் தேர்தலை ஆட்சேபிக்கும் மனு

செல்லத்தக்கது என தேர்தல் வழக்கு மன்ற முடிவு

மதுரை, ஜூலை 5—

சாத்தூர் தொகுதியிலிருந்து சென்னை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டகாமராசரின் தேர்தலை ஆட்சேபித்து குஞ்சுதேவர் தாக்கல் செய்திருந்த ஆட்சேபனை மனு செல்லத்தக்கது என்று தேர்தல் வழக்கு மன்றத் தலைவர் பி. கே. சுப்பிரமணிய (அய்யர்) தீர்ப்பளித்துள்ளார். தேவரின் மனு செல்லத்தக்கதல்ல என்று காரணம் காட்டி கனம் காமராசர் தரப்பில் கூறப்பட்டிருந்த ஆட்சேபணைகளை வழக்குமன்ற நீதிபதி தள்ளுபடி செய்தார்.

காமன்வெல்த்தில் மலேயா இடம்பெறும்

லண்டன் ஜூலை 4—

அடுத்த திங்களில் மலேயா சுதந்திரம் பெறுகிறது. சுதந்திர மலேயாவை காமன்வெல்த்தில் சேர்த்துக் கொள்வது என்று காமன்வெல்த் நாடுகளின் அமைச்சர்கள் ஏகமனதாக முடிவு செய்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

நிலையும் - நடப்பும்!

பாரிஸ், ஜூலை 4—

அரசாங்கத்திற்குக் கட்டாயமாக விவசாய விளை பொருள்களை குடியானவர்கள் செலுத்தும் முறையை ரஷ்ய அரசாங்கம் நிறுத்தி வைத்திருப்பதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது. அடுத்த சனவரி திங்கள் முதல் இது அமுலுக்கு வருமாம்.

ஜப்பானிய முறை சாகுபடி

தீவிரப்படுத்த டில்லியின் உத்தரவு

புதுடில்லி, ஜூலை 5—

ஜப்பானிய முறை சாகுபடியைத் தீவிரப்படுத்தவேண்டும் என்றும், அதன் மூலம் இரண்டாம் திட்டத்தின்கீழ் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றும் மாநில சர்க்கார்களை டில்லி சர்க்கார் கேட்டிருக்கிறதாம்!

1957-58ம் ஆண்டில்23,82,000 ஏக்கர் நிலத்தில் இந்தத் தீவிர சாகுபடி செய்வதென முடிவாகியிருப்பதாகவும், இதில் பெரும் பங்கு சென்னை மாநிலத்திற்கென்றே ஒதுக்கப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

இரண்டாம் திட்ட காலத்தில், சுமார் 80 இலட்சம் ஏக்கர் ஜப்பானிய சாகுபடியில் ஈடுபடுத்தப்படவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதாம்.

கட்சி நோக்கம்

இல்லையென்கிருர் அமைச்சர்!

சென்னை, ஜூலை 5—

'முற்றிலும் பொருளாதார அடிப்படையிலேயே கதர் திட்டம் மேற் கொள்ளப்பட்டிருக்கிறது; இதில் சுமார் இலட்சம் பேர் பணியாற்றுகின்றனர்; இத்திட்டத்தில் கட்சி நோக்கம் எதுவும் கிடையாது" என்று, மேல் சபையில், அமைச்சர் பக்தவத்சலம் கூறியுள்ளார்.

ஹங்கேரி பற்றிய ஐ. நா. அறிக்கை

பொதுச் சபையில் விவாதம் ?

நியூயார்க், ஜூலை 5—

ஐ. நா. நிறுவனத்தின் பொதுச் சபையின் கூட்டம் செப்டம்பர் 10-ந் தேதியன்று கூட்டப்படலாம் என்றும், ஹங்கேரி பற்றி ஐ. நா. நியமித்த தனிக் குழு தந்துள்ள அறிக்கையை இந்தச் சபையில் விவாதிக்கப்படலாம் என்றும் பிரிட்டிஷ் வட்டாரங்களின் மூலம் தெரியவருகிறது.

நில நடுக்கத்தில் 1,500 பேர் மாண்டனர்

தெஹ்ரான், ஜூலை 4—

ஈரான் தலைநகருக்கு வட கிழக்கிலுள்ள லார்சானில் கடந்த திங்களன்று நிகழ்ந்த பயங்கரமான நில நடுக்கத்தில் 1,500 பேர் மாண்டனர் என்றும், சுமார் 5,000 பேருக்குமேல் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தேர்தல் விதிகளில் டில்லியின் திருத்தம்

புதுடில்லி, ஜூலை 6—

தேர்தல் விதிகளில் சிலவற்றைத் திருத்தியமைத்திருக்கிறது.

அதன்படி, குருடரோ, கல்வியறிவில்லாதவரோ, தாம்யாருக்கு வாக்களிக்க விரும்புகிருர் என்று தெரிவித்தால், வாக்காளர் தாமாகவோ, அல்லது தேர்தல் அதிகாரியின் துணையுடனே வாக்குரிமையை பயன்படுத்தலாமாம்.

உங்களுக்குத் தெரியுமா?

சென்னை, ஜூலை 4—

மே மாதத்தில் சென்னை பஸ் போக்குவரத்து இலாகாவினுல் ரூ. 13,64,269 சென்னை அரசாங்கத்திற்கு வருமானமாகத் கிடைத்துள்ளது.

நாள்தோறும் சராசரி 308 முதல் 341 பஸ்கள் வரை ஓடியுள்ளன.

1,15,54,483பிரயாணிகள் அரசாங்க பஸ்களில் பிரயாணம் செய்துள்ளனர்.

சென்ற திங்களில் இருந்த 450 பஸ்களுடன் 5 புதிய பஸ்கள் இணைக்கப்பட்டனவாம்.

இந்த தகவல்கள் அதிகாரபூர்வமாக இன்று வெளியிடப்பட்டுள்ளன.

ரூ. 7 கோடி செலவில் புதுவையில் அபிவிருத்தித் திட்டங்களாம்!

38,000 பேர் வேலை வாய்ப்புப் பெறும் நிலை ஏற்படுமாம்

காரைக்கால், ஜூலை 8—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், புதுவை மாநிலத்திற்கு ரூ. 7 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்குச் செலவிடப்படுமாம்.

இதைத் தவிர, மத்திய அரசாங்கம் ரூ. 1 கோடி செலவில் பெரிய—சிறிய தொழில்களை மாநிலத்தில் துவக்க எண்ணியுள்ளதாம். ரூ. 25 இலட்சம் செலவில் புதுவையின் சுற்றுப்புறப் பகுதிகளில் தண்ணீர் வசதி செய்துதரவும் மத்திய அரசாங்கம் யோசித்து வருகிறதாம்.

திட்டங்கள்

விவசாயத் திட்டங்களுக்கு ரூ. 54,60,000; தேசிய விஸ்தரிப்பு திட்டத்திற்கு ரூ. 12,50.000; நீர்ப்பாசனம், மின்சாரத் திட்டத்திற்கு ரூ. 12,50,000; தொழில்களுக்கு ரூ. 20,00,000; போக்குவரத்திற்கு ரூ. 69,00.000; சமூக சேவைக்கு ரூ. 2,16,03,000; மற்ற திட்டங்களுக்கு ரூ. 21,60,000 என்ற அளவில் செலவிட ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

38,000 பேருக்கு வேலை

இந்தியாவுடன் புதுவை இணைக்கப்பட்டதும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளதாம்.

திட்டங்கள் துவக்கப்பட்ட பின்னர் 38,000 பேர் வேலை பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுமாம்.

53 கூட்டுறவு நிறுவனங்கள்

இப்போது புதுவையில் மட்டும் 53 கூட்டுறவு நிறுவனங்கள் ஏற்பட்டுள்ளதாம்.

தொழில்கள்

புதுவை மாநிலம் தொழில் துறையில் முன்னேறி வருகிறதாம்.

கல்வி

முதல் ஐந்தாண்டுக் காலத்தில் கல்விக்காக ரூ. 58,65,000 செலவிடப் பட்டுள்ளதாம்; இதனால் கல்வி நிலையங்கள் இரண்டு பங்காக பெருகியுள்ளதாம்.

சுகாதாரம்

இரண்டாவது திட்டத்தில் மருத்துவம், பொது சுகாதாரம் ஆகியவற்றுக்காக ரூ.1,01,50,000 ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

தாழ்த்தப்பட்டோர்!

புதுவை மாநிலத்தில் 20 சதவிகிதத்தினர் தாழ்த்தப்பட்டவர்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாம். அவர்களின் முன்னேற்றத்திற்காக ரூ. 5,85,000 மட்டுமே செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

சிறை இலாகா

உயர் அதிகாரி 'சஸ்பெண்ட்'

மைசூர் சர்க்கார் நடவடிக்கை

பெங்களூர், ஜூலை 8—

மைசூர் மாநில சிறை இலாகா இன்ஸ்பெக்டர் - ஜெனரலான (முன்னாள் போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல்) பி. திம்மராஜா என்பாரை சர்க்கார் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி வைத்திருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

இதைப்போலவே, தங்கவயல் போலீஸ் உதவி இன்ஸ்பெக்டர் ஒருவரும் வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்கிவைக்கப்பட்டிருக்கிறார் எனத் தெரியவருகிறது. தங்கவயல் போலீஸ் சூப்பரின்டெண்டெண்ட் கட்டாயமாக விடுமுறையில் செல்லுமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறாராம்.

தங்கவயலில் சில இரும்புக் குழாய்கள் காணாமற்போனது பற்றி சில உண்மைகளை, மாநில இலஞ்ச ஒழிப்பு மற்றும் தணிக்கை இலாகாவினர் கண்டுபிடித்து சர்க்காருக்குத் தெரிவித்ததின் பேரிலேயே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவாம்.

உள்நாட்டிலாகா செயலாளர் இது குறித்து இலாகா ரீதியான விசாரணை நடத்துமாறு கேட்கப்பட்டிருக்கிறாராம்.

பிரதமஎஞ்சினீயர்

உட்படமூவர் 'சஸ்பெண்டு'

கேரள சர்க்கார் நடவடிக்கை

திருவனந்தபுரம், ஜூலை 8—

சாலை ஒன்று அமைப்பதில் பெரும் ஒழுங்கீனங்கள் மலிந்திருப்பதாக வந்த புகார்களின் பேரில் ஒரு பிரதம எஞ்சினீயர், மற்றும் மூவரை கேரள சர்க்கார் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

புகார்கள் பற்றி நடத்தப்பட்ட முதல் விசாரணையின்போது, ஒழுங்கீனங்கள் மலிந்திருப்பது காணப்பட்டது என்றும், இதற்கு ஒரு பிரதம எஞ்சினீயர், ஒரு உதவி எஞ்சினீயர், இரு மேற்பார்வையாளர்கள் ஆகியோர் பொறுப்பானவர்கள் எனக் காணப்பட்டதாயும், அதன் பேரிலேயே இந்த நடவடிக்கைகள் என்றும் சர்க்கார் ஒரு பத்திரிகைக் குறிப்பில் கூறியுள்ளார்கள்.

மேலும் இந்த அதிகாரிகள் மீதுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து ஒரு நீதிபூர்வ விசாரணை நடத்தவும் சர்க்கார் உத்திரவிட்டிருக்கின்றனராம்.

பதுக்கலைத் தடுக்க டில்லியின் திட்டம்

மாநில சர்க்கார்களுக்குப் புதிய அதிகாரமாம்

பதுக்கலைத் தடுக்கவும் அவசியம் ஏற்படும்போது சரக்குகளைக் கோரிப் பெறுவதற்கும் உதவியாக, அரிசி மாவு மில்களுக்கும், சில பிரிவு தானிய வியாபாரிகளுக்கும் 'லைசென்சு' விதிக்க மாநில அரசுகளுக்கு டில்லிப் பேரரசு அதிகாரமளித்திருக்கிறதாம்.

அதன்படி, வியாபாரிகளிடம் உள்ள 'ஸ்டாக்கு'கள் பற்றியும், அவை விநியோகமாகும் முறை பற்றியும் அவ்வப்போது மாநில அரசாங்கங்கள் கணக்கு கேட்டு, கண்காணிப்பு வைத்துக்கொள்ள உரிமை உண்டாம்.

மாநில அரசு தயங்காதாம்

சென்னை, ஜூலை 5—

"பதுக்கப்பட்ட உணவுப் பொருட்களை வெளியே கொண்டுவருவதற்கு டில்லி தந்த புதிய அதிகாரத்தைப் பிரயோகிக்க சென்னை அரசாங்கம் தயங்காது,"

என, அமைச்சர் பக்தவத்சலம் சட்டசபையில் குறிப்பிட்டாராம்.

இலட்சியம் பரவ வேண்டியதுதான் நோக்கமாம்!

நினைவுச் சின்னம் எழுப்பும் எண்ணம் கிடையாதாம்

சென்னை, ஜூலை 5—

"கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடத்தில் நினைவுச் சின்ன மெழுப்பும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை"

என நிதியமைச்சர் சட்ட சபையில் அறிவித்துள்ளார்.

கட்டபொம்மனின் இலட்சியமும் சரித்திரமும் மக்களிடையே பரவ வேண்டு மென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கமென, கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'நான்குபேரில் ஒருவர் பிச்சை எடுக்கிறார்'

செங்கோட்டை நிலை குறித்துத் தகவல்

சென்னை, ஜூலை 7—

செங்கோட்டையில் நான்கில் ஒரு பகுதி மக்கள் பிச்சைக்காரர்களாம்!

இந்தத் தகவலை, மேல்சபையில் பேசுகையில், சுப்பிரமணிய கரையாளர் வெளியிட்டிருக்கிறார்.

"செங்கோட்டை நகரின் 20000 மக்களில் சுமார் 5,000 பேர் வரை பிச்சைக்காரர்களாயிருக்கின்றனர் என்றும், இவர்களில் பலர் காலையில் பிச்சைக்காரர்களாகவும் மாலையில் 'கனவான்'களாகவும் காட்சி தருவதாக உறுப்பினர் ஒருவர் கூறியிருக்கிறார்.

"ஒரு பிச்சைக்காரனைப் பிடித்துக் கேட்டபோது, அவன் கூறினானும்— 'ஒரு ஆறுமணி நேரம் பிச்சை எடுத்தால் சுலபத்தில் மூன்று ரூபாய்வரை சம்பாதித்துவிட முடிகிறது; ஆனால் வேறு வேலை செய்தால் நாள் முழுதும் கஷ்டப்பட்டாலும் இதைவிட மிகக் குறைவாகத்தான் சம்பாதிக்க முடிகிறது'—என்று!

மந்திரி பக்தவத்சலம் குறுக்கிட்டு, 'இந்த 'நல்ல' நிலையிலிருக்கும் பிச்சைக்காரர் தொல்லையை ஒழிக்க உறுப்பினர் ஏதேனும் திட்டம் கூறினால், அதனை சர்க்கார் பரிசீலிக்கும்' என்று குறிப்பிட்டாராம்!

பிச்சைக்காரர் தொல்லை ஒழிக்கத் திட்டம்

திருத்த மசோதா வருகிறதாம்

சென்னை, ஜூலை 8—

பிச்சைக்காரர் தொல்லையைத் தவிர்ப்பதற்கு ஒரு திருத்த மசோதா கொண்டுவருவது பற்றி அரசாங்கம் ஆராய்ந்துவருவதாக அமைச்சர் பக்தவத்சலம் மேல்சபையில் தெரிவித்திருக்கிறார்.

ரூ. 10 இலட்சம் செலவில் கறவைப் பசுப் பண்ணை

சென்னைக்கு அருகில் ஏற்படும்

சென்னை, ஜூலை 6—

ரூ. 10 இலட்சம் செலவில் சென்னைக்கு அருகில், கறவைப் பசுப் பண்ணை ஒன்றை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது; இதன் மொத்தச் செலவையும் சென்னை சர்க்கார் ஏற்கும்.

ரூ. 7 இலட்சம் செலவில், சென்னையில் ஆடு வளர்ப்புப் பண்ணை ஒன்று ஏற்படுத்தப்படும்; இதற்காகும் செலவை மத்திய சர்க்கார் ஏற்கும்.

சென்னையிலிருந்து 25 மைல்களுக்கு அப்பாலுள்ள காட்டுப் பாக்கத்தில் கறவைப் பசுப் பண்ணை ஏற்படுத்தப்படலாம்.

வேறு வழியில்லையாம்

புதுடில்லி, ஜூலை 6—

அடுத்த சில ஆண்டுகளில் இந்திய இரயில்வேக்களுக்கு ஓராண்டுக்கு 190 இலட்சம் சதுர அடிவீதம் 'ஸ்லீப்பர்' மரம் (இரயில் பாதையின் நடுவில் போடப்படும் கட்டை) தேவை; ஆனால், இந்தியாவில் கிடைக்கக் கூடியது 100 இலட்சம் சதுர அடி மரம்தான். இங்குள்ள மரங்கள் இக்கட்டைகள் தயாரிப்பதற்கு ஏற்றதாக இல்லை.

"தேவைப்படும் 'ஸ்லீப்பர்' கட்டைகளில் இங்கு 3-ல் ஒரு பாகம்தான் கிடைக்கக்கூடும்; எனவே பர்மா, மலேயா, தாய்லாந்து, ஆஸ்திரேலியா போன்ற அண்டை நாடுகளின் உதவியை நாடுவதைத் தவிர, நமக்கு வேறு வழியில்லை"

என்று இரயில்வே துறை மரவினியோக ஆலோசகர் எம். டி. குர்வேதி என்பார் தெரிவித்துள்ளாராம்.

'உயர்நிலைப் பள்ளிகளையோ மருத்துவ மனைகளையோ திறக்கக்கூடாது'

சேலம் மாவட்ட ஆட்சி மன்றத்திற்கு அரசாங்கத்தின் தாக்கீது!

சேலம், ஜூலை 3—

"சேலம் மாவட்ட ஆட்சி மன்றத்தின் (மாவட்ட போர்டின்) செலவினங்களைக் கணிசமான அளவிற்கு குறைக்கவேண்டும்.

"இந்த ஆண்டில் புதிய உயர்நிலைப் பள்ளிகளையோ அல்லது புதிய மருத்துவ மனைகளையோ திறக்கக்கூடாது.

"செலவினங்களைக் குறைக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் மாநில அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு சேலம் மாவட்ட ஆட்சிமன்றத்தின் 1957—58-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் சம்பந்தமாக சென்னை அரசாங்கம் அனுப்பியுள்ள உத்திரவில் கூறியுள்ளனர்.

சேலம் மாவட்ட ஆட்சிமன்றத்தின் 1957—58-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சமார் ரூ. 8 இலட்சம் துண்டுவிழும் என்று எதிர்பார்க்கப்படுவதாகக் கூறப்பட்டிருந்ததே, அரசாங்கம் மேற்படி உத்தரவு அனுப்புவதற்குக் காரணம்.

சேலம் மாவட்டத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளிகளின் எண்ணிக்கையை உயர்த்த அனுமதிகொடுக்குமாறு ஏற்கனவேயே மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர் தோழர் டி. எம். காளியண்ணன் ஸ்தல ஸ்தாபன அமைச்சரிடம் மனு கொடுத்ததை முன்னிட்டு, 'புதிய உயர்நிலைப்பள்ளிகளைத் திறக்கக் கூடாது' என்று உத்தரவிட்டிருந்தபோதிலும், சேலம் மாவட்டத்தில் 4 புதிய உயர்நிலைப்பள்ளிகளை திறக்க சேலம் மாவட்ட ஆட்சி மன்றத்தாருக்கு அரசாங்கத்தார் அனுமதிதந்திருப்பதாகத் தெரிகிறது. (ந. கி.)

திருப்பனந்தாளில் ஈ. வெ. கி. சம்பத்

கடமை வழிசெல்பவர்களின் தத்துவம் பற்றி விளக்கம்

27—6—57-ல் திருப்பனந்தாளில், தி. மு. கழகச் சார்பில் மாபெரும் பொதுக் கூட்டமொன்று தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது; தோழர் ஈ.வெ.கி.சம்பத் எம். பி., அவர்கள் பொருளாதாரப் புள்ளி விவரங்களையும், வடநாட்டினர் நமது கொள்கையை டெல்லியில் ஆவலுடன் கேட்டுத் தெரிந்துக் கொண்ட நிகழ்ச்சிகளையும் தெள்ளென விளக்கினர்.

கூட்டத்திற்குமுன் மேளதாள வரவேற்புடன்—வேட்டு வெடிகளுடன்—சிறப்பான ஊர்வலமும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளைக் கண்டு வேதனையடைந்த மாற்றார் சிலர் கலவரம் செய்ய முனைந்தனர்; ஆனால், தோழர் சம்பத் அவர்கள், கலவரம் செய்ய முயன்றவர்களின் கேள்விகளுக்குத் தக்க பதிலிறுத்து, தி. மு. கழகத்தின் கண்ணியம்—கடமை—கட்டுப்பாடு வழிசெல்பவர்களின் தத்துவத்தை விளக்கினர். கலவரம் செய்ய முயன்றவர்கள் ஒதுங்கிச் சென்று விட்டனர்.

ஆசிரியருக்குக் கடிதம்:

முறைதவறிய முடிவு!

ஐயா,

'கொள்கைக் குழப்பம் கொண்டோர் மட்டுமல்ல—கொடுமனத்தினருங்கூட' என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர் டில்லி காங்கிரஸ்காரர்கள்!

'இந்து' சமுதாயத்திலே பன்னெடுங்காலமாக அனுபவித்து வந்த சாதியக் கொடுமைத் தீயினின்றும் விடுபடும் வகையில் அண்மையில் தாழ்த்தப்பட்ட மக்கள், உலகமே வியப்புறும் வண்ணம் 'இந்து' மதக்கோட்டைக்கு ஒரு சவால் விடுத்து, புத்த நெறியைத் தழுவினர். அன்னாரைப் பின்பற்றி இந்தியத் துணைக் கண்டத்து தாழ்த்தப்பட்டோர் அனைவருமே அந்நன்னெறியினைப் பின்பற்றத் துடித்துக்கொண்டுள்ளனர்.

பல துறைகளிலும் சரிந்து வரும் 'இந்து'மதக் கோட்டையைக் கண்ணுற்ற டில்லி மூலவர்கள், நச்சுக் கருத்தினராக மாறி 'இந்து' மதத்திலிருந்து புத்த நெறியைத் தழுவிய தாழ்த்தப்பட்டோருக்கு, அரசாங்கத்தாரால் அளிக்கப்பட்டுவரும் 'சலுகைகள்' நீக்கப்படும் என, டாக்டர் அம்பேத்கார் உயிருடன் இருக்கும் காலையிலேயே டில்லி அரசினர் அச்சமூட்டினர்; ஆனால் அம்பேத்கார் அவர்கள், 'புத்தநெறி தழுவிய' தாழ்த்தப்பட்டோருக்கும் அரசாங்கத்திடமிருந்து சலுகைகளைப் பெற்றே தீருவேன்' என முழக்கமிட்டார்.

அத்தகைய வீரன் மறைந்துவிட்டார். அந்தச் சூழ்நிலையில் டில்லி அரசு, அண்மையில் ஓர் அறிக்கை பிறப்பித்துள்ளதை அரசியல் சட்டத்தின் துணை கொண்டு டாக்டர் எ. கிருஷ்ணசாமி அவர்கள், 'அம்மக்களுக்கு மதம் மாறிய காரணத்தால் சலுகைகள் நிறுத்தப்படுவது கூடாது' என அறிக்கை வெளியிட்டுள்ளார்; அதன் வழிநின்று 'நம் நாடு' தலையங்கம் தீட்டியுள்ளது.

'புத்தஜெயந்தி' என்றும், 'புத்தர் விழா'வென்றும் கொண்டாடிவிட்டு அதே சமயம் அந்நெறியைத் தழுவிய மக்களின் வயிற்றில் மண்ணைப்போடும் 'தர்பார்' நடத்தும் காங்கிரஸ்காரர்களை என்ன பண்பினர் என கூறுவது? ஆனால், டில்லிப் பேரரசோ, 'மதச் சார்பற்றவர்கள்' எனப் பறைசாற்றிக் கொள்ளுகின்றனர்.

அடசயன்,
நிலக்கோட்டை.

தெலுங்கன்குடிக்காடு தி. மு. க. செயலாளர்

ஊராட்சிமன்றத் துணைத் தலைவராகத் தேர்வு

உறந்தைராயன்குடிக்காடு,
ஜூலை 2—

1—7—57 அன்று, ஒரத்தநாடு வட்டம்—தெலுங்கன் குடிக்காடு கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஊராட்சி மன்றத்திற்கு, அவ்வூர் தி. மு. கழகச் செயலாளர் தோழர் கு. உலகப்பன் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மற்றும், தோழர்கள் லெ. மாணிக்கம் பல்லவராயர் தலைவராகவும், கா. முருகையன் பல்லவராயர், அ. உத்திராபதி, வி. நடேசவாண்டையார், நாராயணசாமி சேதுராயர், மாணிக்கம் சேதுராயர் ஆகியோர் உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இத்தேர்தல் பட்டுக்கோட்டை உதவி பஞ்சாயத்து அதிகாரி அவர்களால் நடத்தப்பட்டது. (ச-கி.)

முகவரி மாற்றம்

க. அறிவழகன்
9 கி. அக்பாராபாத் 2-வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை-24.

‘நிர்வாகத் துறைகளில் ஊழல்கள் மலிந்து வருகின்றன’

‘உரிமையை விட்டுக் கொடுத்து மத்தியசர்க்காரிடம்மன்ருடுவதேன்?

சென்னை வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் தோழியர் சத்தியவாணிமுத்து கேள்வி

3—7—57-ல், சட்டசபையில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் ஆற்றிய உரையின் முதல் பகுதி நேற்று (7-7-57) வெளியான தனி இதழில் வெளிவந்துள்ளது; அவரது பேச்சின் மற்றைய பகுதிகள் இங்கு தரப்படுகிறது :—

“எங்களுக்குத் தரப்பட்டுள்ள தணிக்கையாளர் அறிக்கையில், விவசாயத் துறையில் எவ்வளவோ ஊழல்கள் நடந்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. விவசாயத் தொழிற்சாலையில் செய்கின்ற பொருள்களை எல்லாம் சரியானபடி விநியோகிக்கவில்லை என்றும், தவருன வழியில் செலவினங்கள் இருப்பதாகவும், அதிகமான பணம் பாழ்ப்படுத்தப்பட்டிருக்கிறதாகவும் கூறப்பட்டிருக்கிறது. அதே அறிக்கையில், பணம் கையாடல், மோசடி போன்ற ஒழுங்கீனங்களுக்கு உதாரணங்கள் தரப்பட்டிருக்கிறது. இம்மாதிரியான நிலை இருக்கின்ற காரணத்தால் நல்ல முறையில் பணம் செலவிடப்படவில்லை என்று மக்கள் கண்ணீர் வடிக்கின்றனர்.

“இப்பொழுது துண்டு விழுகின்ற ரூ. 483 இலட்சத்தை, பருவமழையின் காரணமாக செலவினங்களை ஒதுக்கிவைத்து மிச்சப்படுத்தி சரிக்கட்டப்பட்டிருக்கிறது. குறிப்பாக எனதுதொகுதி—ஆலைகள் நிறைந்த பகுதி; பாட்டாளி மக்கள்—தொழிலாள மக்கள் நிறைந்த பகுதி; கடந்த பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட தொகையில் ஒரு காசுகூட அங்கு செலவு செய்யப்படவில்லை.

“மத்திய நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் விதித்துள்ள வரிப்பளுவினுல் மக்களது உள்ளமே புண்ணுகி யிருக்கிறது; இந்தக் காயம் ஆறுவதற்கு முன்னுலேயே அவர்கள் மீது புதுவரி போட இம்மாநில நிதி அமைச்சர் துணியவில்லை; அந்தத் துணிவும் வரவில்லை.

“தேசிய சிறுசேமிப்புத் திட்டத்தின் மூலமும் வருமானத்தை வெற்றிகரமாக்க முடியும் என்று நிதி அமைச்சர் அவர்கள் தனது வரவு-செலவுத் திட்ட உரையில் கூறியிருக்கிருர்; அதையும் அவர் செய்யப்போவதாகத் தெரியவில்லை. இதுதவிர மத்திய சர்க்காரிடமும் கேட்கவேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார். மத்திய சர்க்காரிடம் ஏன் கேட்கவேண்டுமென்று ஆளும் கட்சியில் உள்ளவர்களும் பேசினுர்கள். தஞ்சை மாவட்டத்திலிருந்து கேரளத்திற்கு நெல் போய்க்கொண்டேயிருக்கிறது என்றும் குறைபட்டார்கள். கேரளத்தையும், மன்ற மாநிலங்களையும் சேர்த்து ஒரே மண்டலமாக அமைத்து, உணவுப் பற்ருக்குறையைப் போக்கவேண்டும் என்று மத்திய சர்க்கார் கூறுகிறது. ஆனுல் மாநில சர்க்கார் கேரளத்தை சேர்த்துக்கொள்ள விரும்புவதாகத் தெரியவில்லை; இதற்காக மத்திய சர்க்காரின் பதிலை எதிர்நோக்கியிருக்கிருர்கள். மாநில சர்க்கார் இச்சீர்கேடான நிலையில் தங்களது அதிகாரத்தை விட்டுக் கொடுத்துவிட்டு மத்திய சர்க்காரிடம் மன்ருடி நிற்கின்றனர் இதையே தான் திராவிட முன்னேற்றக் கழகத்தார் கூறுகின்றனர்.

“விளைச்சல் அதிகமாக இருந்தும் அரிசியின் விலை குறையாமல் இருப்பதற்கு இங்கேயுள்ள அத்தனை அரிசியும் கேரளத்திற்கு சென்று கொண்டிருப்பதும் ஒரு காரணமாகும். இவ் விதம் சென்று கொண்டிருப்பதை தடுக்காமல்—தடுக்கமுடியாமல் இருக்கும் ஆட்சி நமக்குத் தேவையா?—என்றுதான் இந்த நேரத்தில் மன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

“இவைகளையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும்போது நிதி அமைச்சர் அவர்கள் தனது உரையில் இம்மாதிரியான சிக்கல்கள் இருப்பதை மறைமுகமாக ஒப்புக்கொள்கிருர். அவரது உரையில் ‘தேசிய சிறு சேமிப்புத் திட்டத்தை நடத்த ஒரு நல்ல நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி தீவிரமாக வேலை செய்வதன் மூலம் ஓரளவு நிதி திரட்டலாம்; ஆனுல் போதிய அளவிற்கு இம்முறையில் நிதி கிடைக்குமா என்பது சந்தேகம் தான்! ஆகவே நாம் பெரும்பாலும் எஞ்சியுள்ள தொகைக்கு மத்திய அரசாங்கத்தையே நம்பி இருக்க வேண்டியிருக்கிறது; ஆனுல் இந்த உதவி போதிய அளவில் கிடைக்குமென்ற உறுதி இன்னும் கிடைக்கவில்லை! ஆகையால் சபை உறுப்பினர்கள் நம்முடைய மூலதனச் செலவிற்கு வேண்டிய நிதி முழுவதும் கிடைக்கும் என்ற உறுதி இல்லாத நிலை இருப்பதை கவனிக்க வேண்டும்! ஆயினும், ‘சிக்கல்கள் எழும்போது அவைகளை எப்படியும் சமாளித்துக் கொள்வோம் என்ற உறுதியில் இப்பொழுது நாம் முன் செல்வோமாக’ என்று அமைச்சர் கூறியிருக்கிருர். எனவே, சிக்கல் வரப் போகின்றது என்பது உண்மைதான்; அதை மூடி மறைத்து வைத்திருக்கிருர் என்றே நாம் நம்ப வேண்டியிருக்கிறது. ஆகவே இனி சிக்கல்கள் வரும்போது மக்களிடம்தான் கூடுதல் வரிகள் போடுவாரா அல்லது இனியாவது வடநாட்டு சர்க்காரிடம் சென்று அவர்களை தட்டிக் கேட்பாரா என்பதும் புரியவில்லை. ஆகவே, இன்றுள்ள முறையினுல் ‘சரியான விதத்தில் நாட்டினுடைய நலன் கவனிக்கப்படவில்லை’ என்று திராவிட முன்னேற்றக் கழகத்தார் சொல்லுகிருர்கள்.

“திராவிட முன்னேற்ற கழகத்தினர் எடுத்துச் சொல்வதெல்லாம் ‘இவ்வளவு இக்கட்டான நிலைமையை மாற்றி — நமக்காக ஒரு அமைப்பை ஏற்படுத்தி, வடநாட்டு சர்க்காரை எதிர்பாராமல் ஆட்சி நடத்த வேண்டும்; அப்படி ஒரு நிர்வாகத்தை கொண்டு வந்தால்தான் இந்த நாடு சீக்கிரத்தில் சுபிட்சம் அடையும்’—என்பதே!

சேலம் தொகுதி தேர்தல் வழக்கு

காங்கிரஸ்காரரின் முதல் ஆட்சேபம்

தள்ளுபடி செய்யுமாறு நமது வழக்கறிஞர் வாதம்

வேலூர், ஜூலை 7—

சேலம் தேர்தல் வழக்கு நேற்று வேலூர் மாவட்ட நீதிபதி கே. எஸ். வெங்கடராமன் ஐ.சி. எஸ். அவர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரதிவாதி காங்கிரஸ் அபேட்சகர் தோழர் அ. மாரியப்பன் சார்பில் சென்னை மாநில ‘அட்வகேட்—ஜெனரல்’ வி. கே. திருவேங்கடாச்சாரி அவர்கள் ஆஜராகி, முதற்கண் ஆட்சேபணை பற்றி வாதாடினுர்.

தேர்தல் சட்டப்படி, தேர்தலிலிருந்து விலகிக்கொண்ட அபேட்சகர்களையும் வழக்கில் சேர்க்காததால் வழக்கையே தள்ளிவிட வேண்டும் என்று அவர் வாதாடினுர்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சார்பில் வாதாட சென்னை வழக்கறிஞர் வி. பி. இராமன் சென்றிருந்தார்; அவர் தனது பதிலுரையில்,

“சட்டத்தின்படி, போட்டியிடும் அபேட்சகர்களைத்தான் வழக்கில் சேர்க்க வேண்டும்; போட்டியிலிருந்து விலகிக் கொண்டவர்களைப் போட்டியில் கலந்துகொண்டவர்களாக என்றும் கருதமுடியாது. ஆதலால் காங்கிரஸ்காரரின் சார்பாகக் கூறப்படும் ஆட்சேபணையை நிராகரிக்கப்பட வேண்டும்” என்று வாதிட்டார்.

வழக்கறிஞர் வி. பி. இராமன் பல மேற்கோள்களையும் எடுத்துக் காட்டி, பிரதிவாதியின் ஆட்சேபணை ஆதாரமற்றது என்று வற்புறுத்தினுர்.

மேலும், காங்கிரஸ்காரரின் ஆட்சேபணையின் உட்பொருள், வழக்கு சீக்கிரத்தில் விசாரணைக்கு வாராமல் இருக்கவேண்டும் என்பதுதான் என்றும், வழக்கறிஞர் இராமன் எடுத்துரைத்தார்.

இரு தரப்பினரின் வாதமும் முடிந்த பிறகு, நீதிபதி காங்கிரஸ்காரரின் ஆட்சேபணையை நிராகரிப்பது என தீர்மானம் செய்துவிட்டதாகத் தெரிவித்து, தீர்ப்பை 13-ந்தேதியன்று கூறுவதாகச சொன்னுர்.

நீதிமன்றத்திலும், சுற்றுப்புறங்களிலும் ஏராளமான உள்ளூர் வழக்கறிஞர்களும், பொதுமக்களும், உள்ளூர்—வெளியூர் கழகத் தோழர்களும், குழுமியிருந்து வாதத்தைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

பொதுச்செயலாளரும், தோழர் அ. மாரியப்பனும் நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர்.

(ந. நி.)

மாலங்கோவ் கோஷ்டிக்கு எதிராக!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நகரம் தோன்றிய 250-வது ஆண்டு விழா இந்த ஆர்ப்பாட்டங்களால் உச்சம் பெற்றது என்றும், மூன்று மணி நேரம் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டங்களை குடியரசுத் தலைவர் வாரஷிலாவ், குருஷ்சேவ், மார்ஷல் புல்கானின் ஆகியோரும், புதிதாகக் கட்சித் தலைமைக் குழுவில் இடம் பெற்றிருக்கும் முழு உறுப்பினர்களான பி. ஆர். காஜ்லாவ், ஒட்டோ கூசெனின், திருமதி ஏக தெரினு பர்த்செவா ஆகியோரும் கண்டுகளித்தனராம்.

புதிய வரிகள் கண்டனக் கூட்டம்

9—7—57 மாலை 6-மணிக்கு, சென்னை-வண்ணை உதயசூரியன் அறிவியல் மன்றத்தின் சார்பில், இராயபுரம்—இராபின்சன் பார்க் திடலில், தோழர் மு. இராமையா தலைமையில் ஓர் கூட்டம் நடைபெறும்; அதுபோது, தோழர்கள் சி. பி. சிற்றரசு, என். ஜீவரத்தினம், சி. ஆர். பாலசுந்தரம் வி. எஸ். கோவிந்தராசன், பி. ஏ. மூர்த்தி ஆகியோர் பேசுவர்.

தலைநகரைக் குலுக்கிய ஊர்வலங்கள்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

“இன்றையத் தினம் எதேச்சாதிகாரமாக நடந்துகொள்ளும் காங்கிரஸ்காரர்கள் தேர்தல் காலத்தில் எவ்வளவு நல்லவர்களாகக் காட்டிக்கொண்டார்கள்? இன்றைய அவர்களின் போக்கைக் கண்டிக்கும் வகையில்தான் நாம் ஊர்வலங்களும்—பொதுக் கூட்டங்களும் நடத்தி தெளிவாக்குகிருேம்.

“காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக்கு வந்து ஆளும்போது தங்களைப் புலியாகக் காட்டிக்கொள்கிருர்கள்; ஆனுல் தேர்தல் வந்தால் பூனையாக உருவெடுத்துவிடுகிருர்கள். ஆனுல் பொதுமக்கள் தங்கள் பார்வைக்கு பூனையாகத் தெரியும் அவர்களை உண்மையான பூனையா அல்லது புலியா என்று கவனிப்பதில்லை; புலியை பூனையாகவே எண்ணிவிடுகிருர்கள். அது இம்மாதிரி கொடுமையான வரிகளைப் போட்டு மக்களை கசக்கிப் பிழியும் ‘கொடு வரிப் பூனை,’—உண்மையான புலியாக இருப்பவர்கள் என்பதை உணரவில்லை.

‘இம்மாதிரி வரி போடும் இவர்கள் தேர்தல் காலத்தில்!, ‘மக்களுக்கு இவ்வளவு நன்மையிருக்கிறது—அவ்வளவு நன்மையிருக்கிறது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்,’ என்ருர்கள். ஆனுல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு நன்மை ஒன்றும் இல்லை; ஆனுல் தேர்தல் காலத்தில் நன்மையிருப்பதாக வாக்குறுதிகளெல்லாம் கொடுத்தார்கள்.”

மேலும் திரு. அப்பாதுரையார் அவர்கள் பேசுகையில் தென்னகத்து மக்களுக்கு உரிமையில்லையென்பதையும், எல்லா உரிமையும் பெற்று வாழ்பவர்கள் வடநாட்டவரே என்றும், வெளி நாட்டில் தமிழர்கள்படும் அல்லல்களையும், அங்கிருந்து அகதிகளாக வரும் நம்மவர்களை இந்த ஆட்சி கவனிக்காததை விளக்கியும் இன்றைய அரசியல் நிலையை விளக்கியும் பேசினுர்.

இறுதியாகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், ‘ஜூலை 7-ம் நாளி’ன் முக்கியத்துவத்தையும், புதிய வரிக் கொடுமைகளையும் ஆட்சியாளர்களின் நிருவாக இலட்சணத்தையும் புள்ளிவிவரங்களோடு விளக்கினுர்.

இடையில், முறையீடு நகலைப் பெற்றுக்கொள்ள வந்த தோழர் எஸ். சி. சி. அந்தோணிப் பிள்ளை அவர்கள், நகலைப் பெற்றுக் கொண்டு சிறிது நேரம் பேசினுர்

அவர் பேசுகையில், தான் எற்கெனவே வரிக்கொடுமைகளைக் கண்டித்து வரியை எதிர்த்திருப்பதாகவும், இவர்கள் திட்டங்களைப் போட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை யென்றும் இன்னும் வாழ்க்கைத்தரம் குறையுமென அஞ்சுவதாகவும், எனவே நாம் ஒன்றுபட்டு போராட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

தலைவர் முடிவுரையுடன் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

பெரியகுப்பத்தில் பொதுக்கூட்டம்

10—7—57 மாலை 6-மணிக்கு பெரியகுப்பம்—பகுத்தறிவு இளைஞர் மன்றச் சார்பில், தோழர் பி. கே. வாசுதேவன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்; அதுபோது, தோழர்கள் ஏ. கே. வில்வம், டி. எத்திராசன், ஏ. கோவிந்தசாமி, ஏ. பி. சாமி, ஜி. எத்திராசன், டி. பி. பாலன் ஆகியோர் பேசுவர்.

உலக சர்க்கார் வேண்டாம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஒரு போலீஸ்காரரும் மற்றொருவரும்சேர்ந்து அப்பெண்மணியை மைதானத்திலிருந்து வெளியேற்றும்போதும் ‘உலக சர்க்கார் வேண்டாம்,’ என்று அவர் கூவிக் கொண்டே இருந்தாராம்!

****

திராவிடன்

13—6—57 இதழிலிருந்து…

தோழர் டி. கே. சீனுவாசன் சுவைபடத் தீட்டும்

ஈழத்தில்,ஈரேழு நாட்கள்

என்னும் தொடர் பகுதி ஆரம்பமாகிறது

★

மற்றும்,

தாயும் மகளும்

பெரியார் பேசுகிருர்

சுழல் காற்று

ஆகிய பகுதிகளுடனும் சிறப்புக் கட்டுரைகள்—கார்ட்டூன்களுடனும் வெளிவரும்.

விலை 13 காசு

****

கழகக் கூட்டம்

★

குடியேற்றம்

ஆற்றுத் திடலில்

10—7—57 மாலை 6 மணிக்கு

தலைவர் :

டி. சாம்பசிவம்

பேசுபவர் :

இரா. நெடுஞ்செழியன்

சென்னை 42-வது வட்ட

இளைஞர் முன்னேற்றக் கழகத் திறப்புவிழா

அண்ணு கலந்து கோள்வார்

9—7—57 செவ்வாயன்று மாலை 6-மணிக்கு சென்னை-திருவல்லிக்கேணி, சேக்தாவுத் தெருவில் (‘ஐஸ் ஹவுஸ் போலீஸ் ஸ்டேஷன்’ அருகில்), மேற்படி கழகத் திறப்புவிழா பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

அதுபோது, அண்ணு அவர்களும், தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, நீல நாராயணன் ஆகியோரும் உரை நிகழ்த்துவார்கள்.

தோழர் டேப்-இராதாமாணிக்கம் இன்னிசை வழங்குவார்.

‘சைக்கிள் ரிக்ஷா’

‘ஈனத் தொழில் எனக் கூருதீர்’ என்று அன்பழகன் வேண்டுகேள்

சென்னை, ஜூலை 6—

சைக்கிள் ரிக்ஷா ஓட்டுவதற்கு ‘லைசென்ஸ்’ கேட்ட 50 பேருக்கு லைசென்ஸ் தரப்படவில்லை என்றும், இவர்களுக்கு முன்பே ரிக்ஷா இழுக்கவோ, ஓட்டவோ அனுமதி இருக்கவில்லை என்றும், இந்தத் தொழில் கீழ்த்தரமான தாகையாலும், உடலுக்குத் துன்பம் தரக்கூடியதாகையாலும் இது தரப்படவில்லை என்றும் போலீஸ் மந்திரி பக்தவத்சலம், சட்டசபையில் தெரிவித்தார்.

உடனே தோழர் அன்பழகன் எழுந்து, ‘இந்தத் தொழில் ஈனமானது என்கிருர்கள்; உலகில் உழைப்பால் செய்யப்படும் எந்தத் தொழிலும் ஈனமானதல்ல; அதற்கு பதிலாக, இது வருத்தம் தரும்—வேதனை தரும்—துன்பம் தரும் தொழில் என்று குறிப்பிடலாமா?”

என்று, கேட்டார்.

மந்திரி உடனே, ‘இது ஈனமான தொழில் என்று சர்க்கார் கருதவில்லை,’ என்று கூறியிருக்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா நெடுஞ்செழியன் எம்.ஏ